ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

महेशाद्यारभ्य त्वयि विनिहितं तस्करपते
मनश्चोरं मत्कं चपलचपलं दुष्पथचरम् ।
नियम्यैनं सम्यक् कुरु तव वशे मा त्यज वृथा
न कुर्याश्चेद्दोषस्तव शिव भवेत्तत्कुचरितैः ॥ १० ॥

மஹேசாத்யாரப்ய த்வயி விநிஹிதம் தஸ்கரபதே
மநஶ்சோரம் மத்கம் சபலசபலம் துஷ்பதசரம் ।
நியம்யைநம் ஸம்யக் குரு தவ வஶே மா த்யஜ வ்ருதா
ந குர்யாச்சேத்தோஷஸ்தவ ஶிவ பவேத்தத்குசரிதை: ।

தஸ்கரபதே - திருடர்களுக்கு எல்லாம் எஜமானனாய் விளங்கும் ஹே மஹேச!. ஹே ஸர்வேச்வர! இன்றுமுதற் கொண்டு மிகவும் நிலையற்ற சித்தத்தையுடையவனும் கெட்டவழிகளிலேயே எப்பொழுதும் ஸஞ்சாரம் செய்கிறவனும் இருக்கிற என்னுடைய மனமாகிற திருடனை உம்மிடம் ஒப்பிவித்துவிட்டேன். அவனுக்கு நீர் பதியாயிருப்பதால் அவனை சிக்ஷிக்கக் கூடிய அதிகாரம் உமக்குத்தான் உண்டு. ஆகையால் அவனை எவ்விதம் சிக்ஷிக்கவேண்டுமோ அவ்விதம் நன்றாக சிக்ஷித்து உமக்கு ஸ்வாதீனமாகச்செய்து கொண்டு உம்மிடமே வைத்துக்கொள்ளும். அவனை அவனிஷ்டப்படி கெட்டவழிகளில் போகும்படி விடக்கூடாது. இவ்விதம் நீர் செய்யாவிட்டால் அவனுடைய கெட்ட நடத்தைகளால் ஏற்படும் தோஷம் உம்மையே அடையும். ஆகையால் நீர் ஜாக்கிரதையாய் கவனித்துக்கொள்ளவேண்டும்.

திருடனைப்போல் பாபம் புண்ணியம் என்பதைச்சற்றும் கவனியாமல் தனக்குத் தோன்றியதை எல்லாம் பயமில்லாமல் தைரியமாய் செய்யும் தம் மனமாகிற திருடனை அடக்கி ஸ்வாதீனப் படுத்திக்கொள்ள சக்தியற்ற ஒருவன் தன்னை அனுவசியமாய் ஹிம்சிக்கும் பலவானனை திருடனை அரசரிடம் காட்டி அவர் மூலமாய் சிக்ஷித்து நல்வழியில் திருப்புவது போல் திருடர்களுக்குப் பதியாய் அதாவது அரசனாய் விளங்கும் சங்கரரிடம் ஒப்புவித்து நீர் தான் இவனை ஸரியாய் சிக்ஷித்து நல்வழியில் கொண்டுவர வேண்டுமென்று பிரார்த்திக்கிறான். சுபம்! உபபத்திராதிபா,

ஆர்ய தர்மம்.
விபவ-ஸூ கார்த்திகை-மீ எஉ

# வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

## (இரண்டாவது வர்ணகம்.)

(399-வது பக்கத்தொடர்ச்சி)

முதல் வர்ண்கத்தில் ஈசுவரஸ்வரூபநிரூபணம், ஸ்தூல ஸூக்ஷ்ம பிரபஞ்ச ஸிருஷ்டி, மாயையினுடைய ஆவரணவிக்ஷேப சக்திநிரூபணம், அத்யாரோபவாதஸ்வரூபம் முதலானவைகளை ஸங்கிரஹமாகக்கூறி எவன் இங்கு கூறப்பட்டபடி பிரும்மத்தைத் தவிர்த்து வேறு ஒன்றுமில்லையென்றும், அந்தப்பிரும்மமும் நான் தானென்றும் நன்றாய் விசாரித்து அறிகின்றானோ அவன்தான் ஜீவன்முக்தன் என்று வேதாந்தசாஸ்திரங்களின் ஸித்தாந்த மென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தஇடத்தில்எவன் அந்தப்பிரும்மமும் நான்தானென்றும் நன்றாய் விசாரித்து அறிகின்றானோ என்றிருப்பதால் ஸத்குருவின் உபதேசத்தாலும் சாஸ்திரார்த்தங்களின் விசாரத்தாலும் பிரும்ம ஸ்வரூபத்தை நன்கறியமுடியுமேயல்லாமல் வேறுவிதம் ஸாத்திய மில்லையாகையால் அந்த சாஸ்திரத்திற்குற்ற ஸம்பந்தங்களையும் அதைப்படிப்பதிலும் அதிகாரிகளுக்கு வேண்டிய இலக்கணத்தையும் நிரூபிக்கவேண்டிய அவச்யமிருப்பதால் அதற்காக இந்த இரண் டாவது வர்ணகம் துவக்கப்படுகின்றது.

अथ द्वितीयवर्णकेऽनुबन्धचतुष्टयमुच्यते ।

அத த்விதீயவர்ணகேऽநுபந்தசதுஷ்டயமுச்யதே ।

இந்த இரண்டாவது வர்ணகத்தில் முந்தி நான்கு அனுபந்தங்கள் கூறப்படுகின்றன. அவையாவன.— 1. விஷயம், 2. பிரயோ ஜனம், 3. ஸம்பந்தம், 4. அதிகாரி என்பவைகளே. இந்த வேதாந்தசாஸ்திரம் எதற்காக எற்பட்டது, எந்த வஸ்துவை அது அறிவிக்கின்றது என்று நிகழும் சங்கையைப் போக்க

வேண்டி இந்தவேதாந்தசாஸ்திரத்திற்குப்பிரும்மம்தான் விஷயம்; பிரும்மத்தைத்தான் போதிக்கின்றது. இவ்விதம் பிரும்மத்தைப் போதிக்கும் வேதாந்தசாஸ்திரத்தை நாம் எதிற்காகக் கற்கவேண்டும். அதினால் நமக்கு யாது பயன்என்கிற வினாவிற்கும் விடையளிக்கிறார். मोक्ष एव प्रयोजनम् மோக்ஷஏவ ப்ரயோஜநம். இதனால் அடிக்கடி இந்த ஸம்ஸாரத்தில் விழுந்து பிறப்பிறப்பென்னும் பெரும் பிணியால் சொல்லவியலாத பல கஷ்டங்களை நாம் தற்காலம் அனுபவித்துக்கொண்டு பெரியபந்தத்தில் கட்டுப்பட்டிருப்பதால் பிரும்மஸ்வரூபஸாக்ஷாத்காரஞானத்தைப் பெற்றால் அதினால் இந்த ஸம்ஸாரபந்தத்திலிருந்தும் விடுபட்டு என்றுமழிவில்லாத உத்தமமான ஆனந்தஸ்வரூபமாக ஆகலாம். இதுவே பிரயோஜனமாகும் என்கிறார்.

சாஸ்திரத்திற்கும் அதினால் போதிக்கப்படும் விஷயத்திற்கும் உள்ள ஸம்மந்தம बोध्यबोधकभाव: போத்யபோதகபாவ:= அதாவது அறியத்தகுந்தது அறிவிக்கிறது, என்கிறதேயாகும். இந்த வேதாந்தசாஸ்திரத்தைமுறைப்படி கற்றுஅதிற்கூறியபடிபிரும்ம ஞானத்தைப்பெற நான்கு ஸாதனங்களுடன் கூடியவரே அதிகாரியாவார். நான்கு ஸாதனங்களாவன:- 1. நித்யாநித்யவஸ்து விவேகம், 2. இஹாமுத்திரார்த்தபலபோகவிராமம், 3. ஸமாதிஷட்கம்,4. முமுக்ஷுத்வம் என்பவைகளே.பிரும்மம் ஒன்றுதான் நித்யம் அதைத்தவிர நம்மால் பார்க்கப்படும் ஸகலப்பிரபஞ்சமும் அநித்யம் என்று சுருதிஸ்மிருதிபுராணம் முதலிய பிரமாணங்களால் ஸ்வயமாக எற்படும் ஞானத்திற்கு நித்யாநித்யவிவேகமென்று பெயர். இவ்வுலகிலுள்ள புஷ்பஹாரம் சந்தனம், பத்நீ, புத்திரன், பொருள், பூமி முதலான விஷயபோகங்களும் பரலோகத்திலுள்ள அப்ஸரஸ்திரீ இந்திரனுடையதான ஸ்வர்க்கம் முதலிய விஷயபோகங்களும் ஸ்திரமல்ல, அநித்தியமானவைகள் என்று இயற்கையில் தோன்றி நாயினால் வெளியில் கக்கித்தள்ளப்பட்ட அன்னமலம் மூத்திரம் முதலானவைகளில்போல் இவைகள் உபயோகமில்லாதவைகள், மிகவும் நிந்தியங்கள் என்று எற்படும். அப்பிரியத்திற்கு இஹாமுத்திரார்த்த பலபோகவிராகமென்று பெயர் சமம், தமம், உபரதி, திதிக்ஷை ஸமாதானம், சிரத்தை என்கிற இவைகளே ஸமாதிஷட்கங்கள் பரமாத்மவிஷயமான சிரவண மன

F064



ஞாதிகளைக்காட்டிலும் வேறான விஷயங்களில் மனத்திற்கிருக்கும் பற்றுதலை அறவே விலக்கி எப்பொழுதும் ஆத்மவிஷயமான சிரவணாதிகளில் மனதை ஸ்திரமாய் வைப்பதே சமமாகும். தமம் என்றால் ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்களென்று கூறப்பட்ட ஸகல இந்திரியங்களையும் அவைகளிஷ்டப்படி கெட்டவழிகளில் செல்லவிடாமல் தடுத்து சாஸ்திரீயமான மார்க்கத்தில் போகும்படி செய்யவேண்டுமென்று பொருள். உபரதி-சிறந்த ஆத்மஞானத்தைப் பெறுவதற்கு முக்கிய ஸாதனமான ஸந்யாஸாச்ரமத்தைப்பெறுவது அல்லது பலங்களில் விருப்பமின்றி தமக்குற்ற கர்மங்களையனுஷ்டித்து பகவதர்ப்பணம் செய்வது அன்றேல் உலகவியவகாரங்களில் ஸம்பந்தப்படாமல் பூராவையும் விலக்கிவிட்டு சாந்தமான மனதுடனிருத்தல் என்பதே உபரதியாகும்.

(இன்னும் வரும்)

---

உபபத்திராதிபர்.

## சிதம்பரம் ரா. ம. சு: வித்யாசாலையில்
## நவராத்திரி மஹோத்ஸவக் கொண்டாட்டம்.

ஷை வித்யாசாலையில்,

**मूलेनावाहयेद्देवीं श्रवणेन विसर्जयेत् ।**

**மூலேநாவாஹயெத்தேவீம் ஶ்ரவணேந விஸர்ஜயேத் ।**

என்கிற வாக்கியத்தையனுஸரித்து சென்ற ஐப்பிசி-மீ 3உமுதல் 6உவரையில் வேதபாராயணமும், இரவு 7-மணிமுதல் 9-மணி வரையில் ஸஹஸ்ரநாமார்ச்சநாதிகளும் வழக்கம்போல் நடைபெற்றன. ஷை-மீ 6உ ஸோமவாரத்தன்று ஸரஸ்வதிபூஜை அதி விமரிசையாக நடைபெற்றதுடன் அன்றிரவில் தேசமங்கலம் மகா-ா-ா-ஶ்ரீ K. R. Y. வீணை வெங்கடேசபாகவதர் அவர்களால் வீணைக்கச்சேரியும் நடத்தப்பட்டது. பக்தகோடிகள் அனைவரும் விஜயம் செய்திருந்தனர். ஷை கச்சேரி முடிந்தவுடன் மானேஜர் மகா-ா-ா-ஶ்ரீ நாராயணஸாமி அய்யர் அவர்களை முன்னிட்டு சாஸ்திரக்கக்ஷி வித்யார்த்திகளால் ஷைபாகவதர் அவர்களுக்கு மாலை சூட்டப்பட்டது. அனைவரும் ஆநந்தத்துடன் கரகோஷம் செய்தனர். அத்துடன் ஸபை கலைந்தது.

ப்ரும்மஶ்ரீ M. N. ராகவசாஸ்திரிகள் அவர்களுடைய

---

சிஷ்யர்கள், சிதம்பரம்.

# லக்ஷார்ச்சனை.

நன்னிலம்தாலூகா செம்மங்குடி என்கிற ஸ்வர்ணபுரீக்ஷேத்திரத்தில் ஸ்ரீ அகஸ்தியமஹாமுனிவரால் பூஜைசெய்யப்பட்ட ஸ்ரீ ஆனந்தவல்லீஸமேத ஸ்ரீ அகஸ்தீச்வரனெனப் பெயர்வாய்ந்த ஸ்ரீகைலாஸாதிபதியான ஸ்ரீ பார்வதிபரமேச்வரருக்கு ஷை க்ஷேத்திரத்தில் விளங்கும் பக்தர்களால் சென்ற மூன்றுவருஷங்கள் போல் இவ்வருஷமும் ஸ்ரீ சாரதாநவராத்திரிமஹோத்ஸவத்தில் புரட்டாசி-29௨ பானுவாரம்முதல் அற்பிசி-மீ 6௨ ஸோமவாரம் முடிய விசேஷ அபிஷேக அலங்காரங்களுடன் ஸ்ரீ ஆனந்தவல்லி என்றும் பெயர்பூண்ட பராதேவதைக்கு விதிப்படி நான்காவது வருஷ லக்ஷார்ச்சனையும் நடைபெற்று அற்பிசி-மீ 7௨ ருத்ராபிஷேகமும் நடந்து முடிவுபெற்றது. இந்த ஸமயம் ஒவ்வொரு தினத்திலும் சிவனடியார்களில் பலரும் விஜயம்செய்து ஸ்ரீ ஆனந்தவல்லீஸமேத அகஸ்தீச்வரரை பக்தியுடன் தரிசனவந்தனாதிகள் செய்து ஷை ஆதிதம்பதிகளுடைய அனுக்கிரஹத்திற்குப் பாத்திரர்களானார்கள்.

M. S. சுந்தரேசய்யர்,
செம்மங்குடி.

---

பனையப்பட்டி

## ஸ்ரீ ஸநாதந தர்ம ஸம்வர்த்தனீ ஸபை.

**गजाननाय महते प्रत्यूहतिमिरच्छिदे ।**
**अपारकरुणापूरतरंगितदृशे नमः ॥**

𑌗𑌜𑌾𑌨𑌨𑌾𑌯 𑌮𑌹𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌤𑌿𑌮𑌿𑌰𑌚𑍍𑌛𑌿𑌦𑍇 ।
𑌅𑌪𑌾𑌰𑌕𑌰𑍁𑌣𑌾𑌪𑍂𑌰𑌤𑌰𑌂𑌗𑌿𑌤𑌦𑍃𑌶𑍇 𑌨𑌮𑌃 ।

இந்த ஸபை பிரபவ-ஸூ அற்பிசி-மீ த்தில் ஆரம்பமாகி ஈசுவரானுக்கிரஹத்தினாலும், ஸ்ரீ ஜகதாசார்யர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அவர்களின் கிருபையாலும், மஹாஜனங்களின் ஐகமத்யத்தினாலும், மேன்மேலும் அபிவிருத்தியாகி விருத்தியடைந்து ஒருவித் விக்கினமுமின்றி மாதாமாதம் நடைபெற்று விபவ-ஸூ அற்பிசி-மீ 10௨யாகிய சுபதினத்தில் வருஷபூர்த்தி உத்ஸவத்தையும் நடத்திக்கொண்டது. அன்றையதினம்

Fo66



வழக்கம்போல் ஸ்ரீ ஆசார்யாள் படம் வைத்துப் பூஜித்து தீபாராதனை, உபநிஷத் பாராயணம் நடந்தது. அனேக நண்பர்கள், அபிமானிகள் வந்திருந்தார்கள்.

ஸபையின் அபிவிருத்தியை உத்தேசித்து ஸ்ரீ ஆசார்ய பரம்பரை ஸ்தோத்திரமும். ஸ்ரீதிரிபுரஸுந்தரீ ஸ்தோத்திரமும், ஈசுவர பஜனையும் நடந்தது. சிரஞ்ஜீவி ஒருவயதுள்ள ஸ்ரீ ஸநாதனதர்ம ஸம்வர்த்தினீ சிசு தீர்க்காயுளை அடைந்து மேன்மேலும் பெருபெருவாழ்வை உடையதாக இருக்கவேணுமென்று எல்லாருடைய ஆசீர்வாதத்தையும் கோரப்பட்டது.

உலகத்தில் ஸகல ஸுகங்களை அடைவதற்கும், ஸதாசாரஸம்பன்னர்களாயிருப்பதற்கும் வித்தை அவசியம் என்ற விஷயமாய் ஷை ஸபை கார்யதரிசி. பிரம்மஸ்ரீ வெங்கடேசய்யர். பாண்டவர்கள் விராடநகரத்தில் வாஸம் செய்ததுமுதல் பட்டாபிஷேகம்வரையுள்ள சரித்திரத்தைச்சுருக்கமாய் பிரஸங்கம் செய்தார்.

அநேகம் ஆஸ்திகர்கள் ஸபைக்கு வந்திருந்து ஸபையை அலங்கரித்தார்கள். முடிவில் பானகபூஜையும் நடந்தது. மிகவும் உத்ஸாஹத்துடன் ஸபை பூர்த்தியாயிற்று. சுபம்.

வெங்கடேசய்யர், ஷை ஸபா காரியதரிசி

---

உ

ஸ்ரீ ப்ருகந்நாயகி கிருபை.

# இளமையில் விவாஹம் இன்பம்.

1. விவாஹம் எதற்கு? தன் குடும்பமாகிய ராஜ்யத்தை அரசாக்ஷிசெய்ய, அதனால் உண்டாகும் நன்மை யாது? துக்க நிவர்த்தியும், நித்யஸுகமும், விவாஹம் போகத்திற்குமாத்திரம் ஏற்பட்டதா அல்லது தர்மத்திற்கு ஏற்பட்டதா? போகமே உத்தேசமானால் விவாஹம் என்கிற சடங்குகள் தேவையில்லை. ஆதலால் தர்மத்தைச் செய்யவே ஏற்பட்டது.

2. தர்மங்களால் ஏற்படும் பயன்கள் என்ன? தர்மங்கள் கெடுதியை (அதாவது தோஷத்தை) விலக்குகின்றன. தோஷங்

கள் விலகினல் கர்மங்கள் போய்விடுகின்றது, கர்மங்கள் விலகினல் ஜீவனுக்குள்ள துக்கம் விலகிவிடுகிறது. அதனல் ஜீவன் துக்கமில்லாமல் ஸ்வரூப ஆனந்தத்தில் ஸுகஸ்வருபியாகப் பிரகாசிக்கின்ருன், அதுதான் முக்தியென்று சொல்லப்படுகிறது ஆதலால் தர்மங்களினின்றும் துக்கநிவர்த்தியும், நித்யானந்தமும் உண்டாகின்றது.

3. கர்மா என்பது என்ன? சரீரம் வாக்கு மனம் இவைகளால் செய்யப்படும் செய்கைகள். அவைகள் எப்பொழுதும் பலனைக்கொடுக்கத் தயாராக இருக்கின்றன. கர்மா ஜீவனை பந்தரூபமாய்க் கட்டுப்படுத்துகிறது. பந்தம் என்ருல் நித்யஸுகத்தினின்றும்தடுத்து ஜீவனை துக்கப்படச்செய்கின்றது.

4. கர்மவினைகளை ஒழிக்க தர்மம். கர்மா எத்தனை விதத்தில் முக்கியமாக ஜீவனைக் கட்டுப்படுத்துகிறதென்ருல் ரிஷிரிணம், தேவரிணம், பிதுர்ரிணம் என மூன்றுவகைகளாகக் கட்டுப்படுத்துகின்றன. இந்த க்கடன்களை நிவர்த்திசெய்துகொள்ள வேண்டியது ஜீவனுக்கு அவசியமென்று ஏற்படுகின்றது. எத்த தர்மத்தினல் கடன்கள் நிவர்த்தியாகும்? ப்ரஹ்மசர்யத்தில் வேதப்பயிர்ச்சி, கல்விப்பயிர்ச்சி, குருகுலவாஸம் இவைகளினல் ரிஷிகள் கடன் தீர்ந்துவிடுகிறது. விவாஹத்தினல் ஸத்ஸந்ததி உண்டாகி பிதுர்க்களது கடன்களும் யாகத்தினல் தேவர்களது கடன்களும் தீர்ந்துவிடுகிறது. ஆகவே ரிஷிகள், தேவர்கள், பிதுர்க்களது அநுக்ரஹங்களும் உண்டாகின்றன. ஆகையால் தேவர்களது கடனையும், பிதுர்க்களது கடனையும் நிவர்த்திசெய்துகொள்ள விவாஹம், கன்னிகாதானம் என்ற தர்மங்கள் ஏற்பட்டதென்றே தெரியவருகிறது. இக்காரணம் பற்றியே கொடுக்கப்படும் கன்னிகைக்கு தர்மபத்நி என்றும் பெயர் ஏற்படுகின்றது. பெண்கள் கன்னிகாபருவத்தில் தானம் செய்யப்படுகிறபடியால் கன்னிகாதானம் என்று விளங்கிவருகிறது. ரஜஸ்வலாதானம் என்று இல்லாததால் பெண்கள் கன்னிகாபருவத்தில் தானம் செய்யப்படவேண்டும். ஆதலால் கர்மவினையைத் துலக்கவே கன்னிகாதானமும், தர்மபத்நியும் அவச்யம்.

5. தர்மத்தைச்செய்யவே விவாஹம். விவாஹம் ஒருவாறு போகத்திற்கு ஏற்பட்டதென்று நினைத்தால், அது சிற்றின்பத்தை

கொடுக்கிறதேதவிர ஒருபோதும் நித்யஸுகம் உண்டாகிறதில்லை எப்படியென்றால் ஒருவன் போகத்திற்கென்று நினைத்து விவாஹத்தைச் செய்துகொண்டால் பிறக்கும் ஸந்ததிகள் கேவலம் போக இச்சையுடனே பிறக்கின்றன. தர்மத்தில் விருப்பமில்லாததால் ஜீவனுக்கு ஏற்பட்டுள்ள தேவ பிதுருகடன்கள் நிவர்த்தியில்லாமல் பாக்கியில் நின்றுவிடுகிறது. தேவபிதுரு சாபமும் ஜீவனுக்கு உண்டாகின்றது. ஜீவனுக்குள்ள கர்மரூபமான கடன்கள் நிவர்த்திக்கப்படாததினால் துக்கமும் விலகவில்லை. ஆதலால் எப்பொழுதும் ஜீவன் போகஇச்சையினால் துக்கியாக ஏற்படுகிறான். பின் பிறக்கும் ஸந்ததிகளும் காம இச்சையினால் துக்கப்படும்படி செய்தவனாகவும் ஏற்படுகிறான். ஆகையால் தர்மத்தைக் கோரியே விவாஹம் அவசியமென்று ஏற்படுகிறது.

6. இயற்கையில் ஜீவ ஈச்வர ஐக்யம். உலகத்தில் ஆண், பெண் என்ற இரண்டுவிதப் பிறப்பு இயற்கையில் காணப்படுகின்றன. ஆணை ஈச்வர கலையாகவும், பெண்ணை ஜீவகலையாகவும் வைத்துப்பார்க்கையில் ஜீவ ஈச்வர ஐக்யம் உண்டாகிறது. குரு தெய்வம் என்கிறஎண்ணத்துடன் பாதிக்ஞைபூர்வமாக விவாஹத்தில் கன்னிகை புருஷனை அடைகின்றாள். ஆதலால் ஜீவனாகிற கன்னிகைக்கு புருஷனாகிற ஈச்வரனிடத்தில் ஐக்யம் ஏற்படுகின்றது. தவிர மனதை ஸ்திரீயென்றும், புத்தியைப் புருஷனென்றும் வைத்தாலும் மனது புத்தியுடன் சேருவதால் புத்தி ஞானத்தை உண்டுபண்ணி அதன்வழி துக்கம் விலகி கன்னிகைக்கு நித்யஸுகம் உண்டாகிறது. அதனால் ஜீவனுடைய துக்கநிவர்த்திக்கும் நித்யஸுகத்திற்கும் விவாஹமுறை என்ற தர்மம் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறதென்றே தெரியவருகிறது. ஆகையால் விவாஹம் என்பது தர்மத்தைச் செய்ய ஏற்பட்டதேதவிர கேவலம் போகத்திற்கு ஏற்பட்ட ஒப்பந்தம் அல்ல.

7. ஸம்ஸ்காரம்:— விவாஹமானது ஸம்போகம் என்று ஏற்படாது. விவாஹம் என்றால் பிள்ளைகளுக்கு உபநயனம் போல் கன்னிகைக்கு அக்னிபலம் உண்டாகவும், பதிவ்ரதாதர்மத்தையுபதேசிக்கவும் ஏற்பட்டதோர் ஸம்ஸ்காரம். பதிவ்ரதா தர்மத்தை அனுஷ்டிக்க மனது குணகர்மங்களினின்று நல்வழிப்படுவதற்கு பழக்கம் இளமையில் ஏற்படவேண்டும், அதற்கு

ஏற்பட்ட காலம் கன்னிகைப்பருவம். அதாவது 8-முதல் 10-வயதுக்குள் விஷயஸுகம் இல்லாததால் தகுந்த காலமென்று சொல்லுகிறோம். துக்கத்தைக் கொடுக்கும் பந்தரூபமான யாவற்று கர்மவினைகளை ஒழித்து ஆத்மலாபத்தை அடைய பதிவ்ரதா தர்மம் சிறந்ததென ஸ்திரீகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஓர் பதிவ்ருதா தர்மத்தினாலேயே ஸ்திரீகள் தங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான புருஷார்த்தங்களையும் அடைந்து நித்தியானந்தத்துடன் லக்ஷ்மிதேவியைப்போல் விளங்குகிறார்கள் என்று சாஸ்திரத்திலும் பல்லாண்டுகணக்கான அனுபவத்திலும் தெரியவருகிறது. ஆதலால். பதிவ்ரதாதர்மத்தை அனுஷ்டிக்க ஸ்திரீகளுக்குக் கன்னிகை பருவத்தில் விவாஹம் என்கிற ஸம்ஸ்காரம் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

8. ரக்ஷகனும், கல்வியும்.— கன்னிகைக்கு ஒருவாறு பாதுகாப்பு பெற்றவர்கள் ஆனாலும் ஆயுள் பூராவும் இன்பத்தைக் கொடுத்துப்பாதுகாப்பதில்பர்த்தாவுக்கு ஈடாக தாயார் தகப்பனார்களும்கூட ஆகமாட்டார்கள். பெண்ணின் கல்விக்கு பர்த்தாவின் வீடு ஓர் பள்ளிக்கூடமாக ஏற்பட்டுவிடுகிறது. அதற்கு மாமனார் Principal என்றும், மாமியார் வாத்தியார் என்றும் ஏற்படுகிறார்கள். 'பிள்ளைக்கு வாத்தியும் பெண்ணுக்கு மாமியும்' என்ற பழமொழியும் உண்டு. மாமியார் கற்றுக்கொடுக்கும் குடும்பவேலைகள், மனதை நல்வழிப்படுத்தவேண்டிய விதம் பெரியோர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறை, குடும்பத்தை நடத்தக்கூடிய திறமைஇவைகளெல்லாம் பர்த்தாவின வீட்டுப்பழக்கத்தினால்பெண்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. வேறுவீட்டுப் பெண்ணாக இருந்தாலும்கூட புருஷன்வீட்டில் சிறுவயதிலிருந்து வளர்ந்துவிடுகிறபடியால். மனம் கோணாமல் நடத்தக்கூடிய திறமையும் பர்த்தா தெய்வமென்கிற. பக்தியும் விவேகத்துடன் நிலைத்த மனமும் வெகு நேர்த்தியாக ஏற்பட்டுவிடுகிறது. இவைகள் உண்டாவதற்குச் சிறுவயதில் ஏற்படும் விவாஹந்தான் காரணம். ஆதலால் கன்னிகைக்கு குருகுலவாஸம் பர்த்தாவின் வீடு என்று சொல்லுகிறோம். புத்தியாகிற பர்த்தாவிடத்தில் நிலைத்த அன்பும் பதிவ்ரதா தர்மமும் இவைகளைக் கர்ட்டிலும் வேறு படிப்பும் ஆத்மலாபத்தை அடையப் பெண்களுக்கு அவசியமோ? வெகு நேர்த்தியாகஅமைக்கப்பட்டிருக்கும் வீட்டுவேலைகளைக்கொடுத்துத்தகுந்த

பலத்தை உண்டுபண்ணுவதில் மாமியாரை ட்ரில்மாஸ்டரென்றே சொல்லவேண்டும். அந்தப்படி செய்யாமல் அலக்ஷியம் செய்து வருவதினால் நாளுக்குநாள் ஸ்திரீகளின் தேகபலம் குறைந்து கொண்டே வருகின்றது.

9. உத்ஸாகத்தை உண்டுபண்ணும் பர்த்தாவுடன் கூடிக் குலாவிக்கொண்டு ஸந்தோஷத்துடன் வீட்டுவேலைகளைச் செய்வதில் பெண்களுக்கு எற்படும் விளையாட்டைப்பார்க்கிலும் பள்ளிக்கூடத்துப் பந்துவிளையாட்டும் அவசியமோ? ஆங்கிலேயப் படிப்பினால் அடிமைப்பட்டு ஸநாதனதர்மத்தை இழந்து திசை கெட்ட கப்பல்போல் வயிற்றுச்சோத்துக்கு மன்னாடும் புருஷர்களது கூட்டம் நமது தேசத்திற்கு போறாதென்று எண்ணுகிறீர்கள்? ஸ்திரீகளும்கூடத் தங்களது தர்மங்களை இழக்கவா காலேஜ் படிப்பை வேண்டுகிறீர்கள், பெண்களுக்குப்பதிவ்ருதாதர்மத்தைப் புகட்டி இன்பத்தைக் கொடுப்பதில் பர்த்தாவும், இல்லற அனுபவத்தைக் காட்டி பர்த்ருவாத்ஸல்யத்தை உண்டுபண்ணுவதில் மாமியும் ப்ரஹ்மதேஜஸ் பூர்ணமாய் நிறைந்த பர்த்தாவைத் தேடுவதில் பெற்றோர்களும் தங்களது நேர்த்தியான கடமை என்று அன்புடன் கவலைப்பட இருக்க இவர்களைக்காட்டிலும் கூலிக்குக் காலத்தைப் போக்கும் பள்ளிக்கூடத்து வாத்தி அல்லது மெம்பர் பட்டத்தைத்தரித்து தலைவிரித்தாடும் நண்பர்கள்தான் மேலாக ஏற்பட்டுவிடுவார்களா?

10. ஸத்ஸந்ததி பிறக்க ஆண், பெண்ணுக்குக் கேவலம் காமத்தின் பீடையால் உண்டாகும் நேசமானது கேவலம் மிருக பலத்தையும், மிருககுணங்களையும்தான் ஸந்ததிகளுக்குக் கொடுக்கும். அந்த பலம் ஆடுமாடுகளிடத்திலும்கூடக் காணப்படுகின்றது. புத்திபலமில்லாமையால் ஸ்வதந்திரமில்லாமையால் அடிமையாக நடத்தப்பட்டுப் பெரும் கஷ்டத்தையும் அடையும்படி நேரிடுகின்றது. ஆதலால் புத்திபலமுள்ளவன் என்றைக்கும் மேலாகவே காணப்படுகின்றான். மனிதப் பிறப்பானாலும் புத்தி பலம் அவசியம் வேண்டுமல்லவா? நற்குணங்களுடன் புத்திபலம் உள்ள ஸத்ஸந்ததி பிறக்க ஆண், பெண் இரண்டுமனதும் விவேகத்தில் ஒற்றுமைப்பட்டுத் தங்களுக்கு ஆத்மஸமானமான புத்திரன் வேண்டுமென்று தீவிரமான விருப்பம் இருக்கவேண்டும். இந்தக்கருத்துடன் உண்டாகும் கெர்ப்பமானது ஆத்மாவைப்

போலொத்த புத்திரனைத்தான் கொடுக்கும். அது புத்திபலத்துடன் ஸத்புத்திரனாகத்தான் விளங்கும். இதற்கு விவேகத்தினால் ஒற்றுமை உண்டாக புத்தி தெளிவுடன் இருக்கவேண்டும்.

விவேகம் ஏற்பட்ட மனது புத்தியாகிற பர்த்தாவிடத்தில் நிலைத்திருக்கவேண்டும். மனது நிலைத்திருக்க இளமையில் பழக்கம் ஏற்படவேண்டுமாம். ஏனென்றால்காமவெறி எல்லாப் பிராணிகளின் சரீரத்தையும் மனதையும் பீடிக்கக்கூடிய ஓர்வித ரோகமென்றே புத்திமான்கள் கருதுகிறார்கள். இதற்கு ஏற்பட்ட முக்கியமான காலம், யௌவனம் பெண்களுக்கு 12 அல்லது 15-வயதுக்குமேல் ப்ரௌடையான காலமும், புருஷர்களுக்கு 18 அல்லது 20-வயதுக்குமேலும் யௌவனகால்ம் ஏற்படுகின்றது. ஆனால் கலிகாலத்தின்மகிமையால் இன்னும் இளமையிலேயே புத்திக்கூர்மையும், காமத்தின் பீடையும் உண்டாகிவிடுகிறது. ஆகையால் கன்னிகைக்கு 7-முதல் 10-வயதுக்குள் மனது புத்தியாகிற புருஷனிடத்தில் நிலைத்து திவ்யஞானத்தினால் பதிவ்ருதா தர்மத்தை அடையத் தகுந்த காலமென்று ஏற்படுகின்றது. நன்மையை உத்தேசித்தே பெண்ணுக்குக் கன்னிகைப்பருவத்தில் கன்னிகாதானம் செய்யப்படவேண்டும் என்று வேதத்திலும் விதிக்கப்பட்டிருக்கிறது.

11. வரன்:— வித்யையை அடைந்திருக்கும் ஆண்களுக்குக் காமத்தின் பீடை உண்டாவதற்குமுன் 7-முதல் 18-வயதிற்குள் மனதை அடக்கி ஆள சக்தியையும், புத்திபலத்தையும், தெய்வ ஸம்பத்தையும் அடைய வேதப்பயிற்சி, சாஸ்திரப்பயிற்சி இவைகளினால் விவேகமும், பிரும்மசர்யவிருதத்தால் வைராக்கியமும் உண்டாகி ஆத்மலாபத்தையடையத் தீவிரமான இச்சை உண்டாகிறது. ஆத்மலாபத்தை முக்கியமாக எண்ணி வைராக்கியத்தால் பரதேசம் போகும் பிரும்மசாரியைப்பார்த்துப் பெண்ணுக்குப் பெற்றோர் நான் தானம் கொடுக்கும் என் பெண்ணை நீ தானம் வாங்கவேண்டும். உன்னுடைய வைராக்கியமும் முகத்தில் ஜ்வலிக்கும் பிரும்மதேஜஸ்ஸும் உலகத்தையாளும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவென்றே எண்ணும்படியாகப் பிரகாசிக்கின்றது. நான் உன்னை மஹாவிஷ்ணுஸ்வரூபமாகவே எண்ணிவிட்டேன். தானம் கொடுக்கும் என் கன்னிகையை——நீ தானம் வாங்கவேண்டும். எனது பெண் உனக்கு தர்மபத்னியாகவே இருக்கவேண்டும். உனது

572



கோரிக்கை ஆத்மலாபத்தைத்தவிற வேருென்றிலும் இல்லாமல் போனாலும், தேவ, பிதுர்ரிணங்களைத் தீர்க்க தர்மபத்தினியிடத்தில் ஆத்மஸதிருசமான புத்திரனை நீ அடையவேண்டும். அதனுல் இருபத்தோரு தலமுறை நரகத்தில் கஷ்டப்படும் முன்னோர்களைக் கரையேத்தி முக்தியை அடையும்படி செய்தவனாக நீ ஏற்படுகிறாய். தர்மங்களைச் செய்வதற்காக நீ எனது கன்னிகையை தானம் பெற்று விவாஹம் செய்துகொள்ளவேண்டும். இதனுல் உனக்கு ஸ்வரூபஆனந்தத்திற்கு யாதொரு குறைவும் உண்டாகாது, மனநிலைமையும் தவருது. நீ செம்மையாகக்காமத்தை அடக்கி மனதையும் புத்தியில் நிலைப்படுத்திவிட்டாய், நீ முற்றிலும் மனதை ஜயித்துவிட்டாய், ஆதலால் உனக்கு ஸ்வதந்திரம் ஏற்பட்டுவிட்டது, நீ பிரும்மசர்யவிருதத்தைச் செம்மையாக அனுஷ்டித்துவந்ததுதான் அதற்குக் காரணம். இவ்விதம் பெற்றோர்கள் சொல்லும் பல தர்மங்களுக்கு இணங்கி பரதேசம் புறப்பட்ட பிரும்மசாரிக்கு ஸம்மந்தம் ஒருவாறு ஏற்பட்டுக் கன்னிகாதானமும், விவாஹமும் ஏற்படுகின்றன.

12. பதிவ்ரதாதாமத்தின் மஹிமை:— பதிவ்ரதாதர்ம நெறிதவருத ஸ்திரீகளுக்கும் மழையும் கட்டுப்பட்டுப் பொழிகின்றது. நெருப்பும் ஸீதாதேவியின் பதிவ்ரதாஅக்ஞையால் கட்டப்பட்டும் இருக்கின்றது. இரும்புக்கடலையும் பதிவ்ராதாதர்மத்தின் மஹிமையால் பாகம் செய்யப்பட்டு ஆகாரமாக ஏற்பட்டிருக்கிறது. ஸாவித்திரிதேவி ஸத்தியவான் உயிரையும்கூட எமனிடமிருந்து காப்பாற்றி இருக்கிறாள். ஸதி அனுஸூயையாலும் தன் பதிவ்ராதாதர்மத்தின் மஹிமையால் பரீக்ஷிக்கவந்த ஈச்வராதிகளைக் கூட குழந்தைகளாகச்செய்து பார்வதி, லெக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்களால்பதிபிக்ஷை கேழ்க்கப்பட்டு அதைப்பூர்த்திசெய்விக்கக் குழந்தை உருவத்துடன் விளையாடிக்கொண்டிருக்கும் பிரும்ம, விஷ்ணு, ருத்திராதிகளைக் குழந்தை உருவத்தைமாற்றி அவர்களுக்கு ஸ்வயரூபம் வரும்படி செய்து அவர்களது யதாஸ்தானத்தில்இருக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றது. மனதைஜெயிக்கக் கூடியசக்தி பதிவ்ரதத்தில்அடையப்பட்டால் எதைத்தான் செய்ய வல்லமை உண்டாகாது. (இன்னும் வரும்)

டி. ஏ. ராமசுப்பிரமணியய்யர்.
தத்தனூர்.

न्यासः—63, 104, $\frac{49}{4}$, लब्धा निष्काः, 20, द्रम्माः, 3, पणाः, 8, काकिण्यः, 3, वराटकाः, 11, वराटकभागश्च, $\frac{1}{9}$,

क्रमत्रैराशिक एव प्रमाणराश्यपेक्षया इच्छाराशेर्ह्रासे इच्छाफलह्रासदर्शनार्थं तत्रापीच्छाप्रमाणराश्योः पलत्वेन समजातित्वे उदाहरणमाह—प्रकृष्टेति—प्रकृष्टकर्पूरपलात्रिषष्ट्या, प्रकृष्टमुत्कृष्टं "कर्पूरो द्विविधः प्रोक्तः पक्वापक्वप्रभेदतः । पक्वात्कर्पूरतः प्राहुरपक्वं गुणवत्तरं" इति भावप्रकाशोक्तलक्षणं यदपक्वकर्पूरं (பச்சைக்கற்பூரம்) तस्य त्रिषष्टिपलैः, निष्कचतुष्कयुक्तं=निष्कचतुष्टयसहितं, शतं=निष्काणां शतमित्यर्थः । लभ्यते चेत्, तदा, सपादैर्द्वादशभिः पलैः किं लभ्येतेति हे सखे विचिन्त्याचक्ष्व । अत्र इच्छाफलराशौ निष्कादिवराटकपर्यन्ताः फलतया लभ्यन्ते । इदं च विचिन्त्येत्यनेन सूचितम् । कर्मप्रदीपिकायां तु—"पूर्वोदाहरणे पण्यद्रव्यरूपं कुंकुमं फलत्वेनोपात्तम् । इह तु मूल्यरूपो निष्कः फलत्वेनोपात्त इति भेदः" इत्यनयोर्विशेषोऽभिहितः । न्यासोक्तं विवियते— इच्छाफलराशी, गुण्यगुणकभावापन्नौ प्रमाणराशिना भक्तौ, $\frac{104 \times 49}{63 \times 4} = \frac{182}{9}$ इदमिच्छाफलं निष्कात्मकम् । नवभिर्भक्तं, निष्काः, 20, शिष्टस्तदंशः, $\frac{2}{9}$, षोडशभिस्संगुणिते नवभिर्भक्ते तस्मिन् लब्धा द्रम्माः, 3, शिष्टांशे षोडशनिहते नवभिर्भक्ते लब्धाः पणाः, 8, तदंशे चतुर्गुणिते नवभक्ते लब्धाः काकिण्यः, 3, तदंशे विंशत्यागुणिते नवभिर्भक्ते लब्धा वराटकाः, 11, शिष्टस्तदंशः, $\frac{1}{9}$, इदं च निष्काद्यात्मकं फलं प्रमाणफलापेक्षया न्यूनमिति स्फुटम् ॥ ॥ ७२ ॥

उदाहरणम्—

द्रम्मद्वयेन साष्टांशा शालितण्डुलखारिका ।
लभ्या चेत्, पणसप्तत्या तत्किं सपदि कथ्यताम् ॥७३॥

अत्र प्रमाणस्य सजातीयकरणार्थं द्रम्मद्वयस्य पणीकृतस्य न्यासः, 32, $\frac{9}{8}$, 70, लब्धे खार्यौ, 2, द्रोणाः, 7, आढकः 1, प्रस्थौ, 2,

प्रमाणराशीच्छाराश्योः भिन्नजातीययोरुदाहृतत्वेऽपि समानजातितां सम्पाद्य क्रिया कर्तव्येति दर्शयितुं भिन्नजातीयाविच्छा प्रमाणराशी

उदाहरति—द्रम्मद्वयेनेति—द्रम्मद्वयेनाष्टांशसहिता शालितण्डुलखारिका लभ्यते चेत्, पणानां सप्तत्या तण्डुलमानं कियल्लभ्येत, शीघ्रमुच्यताम्। अत्र द्रम्मजातीयं प्रमाणं, पणजातीयेच्छेति तयोर्विजातीयतया सजातीकरणार्थं षोडशभिर्हत्वा पणीकृतद्रम्मद्वयं प्रमाणमिति प्रदर्शयति—अत्र प्रमाणस्येति—पूर्ववत्कर्मणि कृते खार्यादिकमिच्छाफलं लभ्यत इति स्फुटमेव ॥

इति क्रमत्रैराशिकम् ।

---

अथ व्यस्तत्रैराशिकम् ॥

इच्छावृद्धौ फले ह्रासो ह्रासे वृद्धिश्च जायते ।
व्यस्तत्रैराशिकं तत्र ज्ञेयं गणितकोविदैः ॥ ७४ ॥

यत्रेच्छावृद्धौ फले ह्रासः, ह्रासे वा फलवृद्धिः, तत्र व्यस्तत्रैराशिकम् । तद्यथा—

जीवानां वयसो मूल्ये तौल्ये वर्णस्य हेमनि ।
भागहारे च राशीनां व्यस्तं त्रैराशिकं भवेत् ॥ ७५ ॥

व्यस्तत्रैराशिकस्वरूपमाह— इच्छेति— इच्छावृद्धौ=इच्छायाः=इच्छाराशेः, वृद्धौ=प्रमाणराश्यपेक्षयाऽऽधिक्ये सति, फले=इच्छाफलराशौ, ह्रासः=न्यूनता, ह्रासे=इच्छाराशेर्न्यूनतायां सत्यां, वृद्धिश्च=इच्छाफलराशावाधिक्यं च, यत्र जायते, तत्र व्यस्तत्रैराशिकं गणितज्ञैर्ज्ञेयम् । अर्थात् इच्छावृद्धौ फलवृद्धिः, इच्छाह्रासे फलस्यापि ह्रासो यत्र भवति, तत्र क्रमत्रैराशिकमित्युक्तं भवति । तादृशस्थलं निरूपयति— तद्यथेति— जीवानां=पण्याङ्गना वृषभ महिष करि तुरग पदात्यादीनां, वयसः, मूल्ये=वयसोऽनुगुणतया मूल्यवेतनादिपरिकल्पनविषये, हेमनि=सुवर्णे, वर्णस्य=मूषान्तस्थं सुवर्णमग्नौ धमनादिना यावच्छोध्यते, तावत्तत्र रक्ततादिरूपाभिव्यक्तिः प्रसिद्धा । स एव रूपविशेषो वणिग्व्यवहारे प्रसिद्धो वर्णशब्देनोच्यते तस्य वर्णस्य, तौल्ये=तुलनायां राशीनां भागहारे च व्यस्तं त्रैराशिकं स्यात् । तत्र प्रथममुदाहरति—प्राप्नोतीति— ॥ ७४,७५ ॥

हाह



उदाहरणम्—

**प्राप्नोति चेत्षोडशवत्सरा स्त्री द्वात्रिंशतं, विंशतिवत्सरा किम् ।**

**द्विधूर्वहो निष्कचतुष्कमुक्षा प्राप्नोति धूष्षट्कवहस्तदा किम् ? ॥**

न्यासः— 16, 32, 20, लब्धं निष्काः, 25, द्रम्माः, 9, पणाः, 9, काकिण्यौ, 2, वराटकाः, 8, द्वितीयन्यासः, 2, 4, 6, लब्धं एको निष्कः, 1, भागाश्च, $\frac{1}{3}$,

षोडशवत्सरा=षोडशवयस्का, स्त्री=वाराङ्गना, द्वात्रिंशतं, निष्कानिति शेषः। प्राप्नोतिचेत्=लभते यदि, विंशतिवत्सरा=विंशतिवयस्का, किं प्राप्नुयात्, तथा द्वे धुरौ वहतीति द्विधूर्वहः, उक्षाः=वृषः, निष्कचतुष्कं मूल्यं, प्राप्नोति चेत्, तदा, धूष्षट्कवहः=षड्धूर्वहः, किं मूल्यमर्हति। अत्र षोडशवयस्कायाश्शरीरगुणाद्यतिशयेन मौल्यपरमत्वम्। तदूर्ध्वन्तु यावद्वय उपचीयते, तावन्मूल्यमपचीयते। इच्छावृद्धौ फले ह्रासस्य प्रतीतिरत्र व्यस्तत्रैराशिकम्। तथा च प्रमाणराशिं फलराशिना संगुण्य इच्छाराशिना विभजेत्। तथा द्विधूर्वहस्य वृषस्य मौल्यपरमत्वम्। तस्मात्परं मौल्यापचयो वैश्यव्यवहारे प्रसिद्धः। अतोत्रापि व्यस्तत्रैराशिकम्। क्रिया तु पूर्ववत्। करितुरगादिष्वपीत्थमेवोदाहर्तव्यम् ॥ ७६ ॥

उदाहरणम्- **दशवर्णं सुवर्णं चेद्गद्यानकमवाप्यते ।**

**निष्केण, तिथिवर्णं तु तदा वद कियन्मितम् ॥७७॥**

न्यासः— 10, 1, 15, लब्धं, $\frac{2}{3}$, (गद्यानकः)

सुवर्णोदाहरणमाह—दशवर्णमिति—अत्र निष्केणेति मूल्यद्योतनार्थमेव। न त्रैराशिकार्थम्। दशवर्ण, गद्यानक, तिथिवर्ण, शब्दैरेव राशित्रयोपादानात्। तथा च येन मूल्येन दशवर्ण सुवर्ण, गद्यानकं=एकगद्यानकमितं अवाप्यते, तेनैव मूल्येन, तिथिवर्ण=पञ्चदशवर्ण सुवर्ण, कियन्मितं=मितं मानं, भावेक्तः, कियत्-मितं यस्य तत्तथा। लभ्येत। वद। इत्यर्थो निष्पन्नः। दशवर्णसुवर्णं चेद्गद्यानकमितं लभ्यते, तदा पञ्चदशवर्णसुवर्णं कियन्मानं लभ्येतेति त्रैराशिकस्वरूपम्। यथा यथा वर्णाधिक्यं तथा तथा मितावपचयस्स्यात् सममूल्यत्वादिति व्यस्तत्रैराशिकमिदम् ॥

576



उदाहरणम्- सप्ताढकेन मानेन राशौ सस्यस्य मापिते ।
यदि मानशतं जातं, तदा पञ्चाढकेन किम् ॥७९॥

न्यासः— 7, 100, 5, लब्ध, 140,

राशीनां भागहारे धान्योदाहरणमाह—सप्ताढकेनेति— सप्ताढकपरिमितेन मानपात्रेण धान्यराशौ प्रमापिते सति मानशतं जातं यदि, तदा पञ्चाढकपरिमितमानपात्रेण प्रमापणं कियन्मानं स्यात् । अत्रेच्छाह्रासे फलवृद्धिदर्शनात् व्यस्तमिदम् ॥ ॥ ७८ ॥

## अभ्यासार्थं क्रमत्रैराशिकोदाहरणानि ।

(1) यदि पणद्वयेन पञ्चफलानि लभ्यन्ते, तदा षड्भिः पणैः कियन्तीति प्रश्ने, पञ्चदशेत्युत्तरम् ।

(2) यदि हस्तचतुष्टयमितं वस्त्रं द्वादशद्रम्मैर्लभ्यते, तदा चत्वारिंशद्धस्तमितं कियद्भिर्लभ्यमिति प्रश्ने, 120, द्रम्मैरित्युत्तरम् ।

(3) यदि द्रम्मसप्तकेन पञ्चदशवेणवो लभ्यन्ते, तदा निष्कसप्तकेन कियन्त इति प्रश्ने, 240, वेणव इत्युत्तरम् ।

(4) यदि निष्कनवकेनैकोनविंशतिर्गद्यानकाधरणमेकं त्रयो वल्लाश्चैतावत्स्वर्णं लभ्यते, तदा सप्तत्रिंशन्निष्कैः कियदिति प्रश्ने, 80, गद्यानकाः 1, धरणं, 7, वल्लाश्चेत्युत्तरम् ।

(5) यदि कर्षमितं स्वर्णं, 3, निष्काः, 5, द्रम्माः, 7. पणाश्चैतावता धनेन लभ्यते, तदा गुञ्जात्रयाधिकमाषदशकमितं स्वर्णं कियतेति प्रश्ने, 2, निष्कौ, 3, द्रम्माः, 6, पणाः, 1 काकिणी, 15, वराटकाश्चेत्युत्तरम् ।

(6) यदि कश्चिन्मनुष्यो दिनद्वयेनैकोनविंशतिं क्रोशान् गच्छति, तदा स पञ्चसप्तत्या दिनैः कियत इति प्रश्ने, $712\frac{1}{2}$, क्रोशानित्युत्तरम् ।

(7) यस्य मासिकीप्राप्तिःपादोनाः पञ्चनिष्काः,तस्यैकाह्निकी प्राप्तिः कियती स्यादिति प्रश्ने, 2, द्रम्मौ, 8, पणाः 2, काकिण्यौ, 2, वराटकौ, $\frac{2}{3}$, वराटकभागश्चेत्युत्तरम् ।